உங்களுக்கு?
நகல்

205

தஞ்சாவூர், இந்துசமய அறநிலையத் துறை, இணை ஆணையர் முன்பாக
2011–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 08–ம் நாள்

(திருவள்ளுவராண்டு 2042 தை மாதம் 25–ம் நாள்)

முன்னிலை : திரு.ச.லட்சுமணன் எம்.எஸ்சி, பி.எல்., எம்.பி.ஏ,
இணை ஆணையர்.

<u>அசல் மனு எண். 05/2007</u>

1) ராமசாமி வேளாளர் .... மனுதாரர்கள்
2) பழனிவேல் வேளாளர்
3) பெருந்தகை இளங்கோ
4) ராஜேந்திரன் தொண்டைமான்
5) ரெங்கசாமி முதலியார்
6) சோலைவாசன்

/ எதிர் /

தக்கார் / செயல் அலுவலர்,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
வெண்டாக்கோட்டை .... எதிர்மனுதாரர்

===

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் நிர்வாகம் தொடர்பாக

தமிழ்நாடு, இந்துசமயம் மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் 22/1959–ல் சட்டப்பிரிவு 63(பி)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு இந்துசமயம் மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் 22/1959 (தமிழ்நாடு சட்டம் 22/59)–ன் படி ஏற்படுத்தப்பட்ட விதிகளில் சட்டப்பிரிவு 63(பி)–ன் கீழ் மனுதாரர்களை பரம்பரை அறங்காவலர்க;ள என விளம்புகை கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் சார்பாக, வழக்குரைஞர் திரு.கே.சுப்ரமணியன் ஆஜர் ஆனார். இம்மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு, விதிகளின்படி அறிவிப்பு அனுப்பப்பட்டது.

இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் சாட்சிகளை விசாரணை செய்தும், வாக்குமூலங்களைப் பதிவு செய்தும், மனுதாரர் தரப்பு சான்றாவணங்களை குறியீடு செய்தும், பட்டுக்கோட்டை சரக இந்துசமய அறநிலையத்துறை ஆய்வாளரை நீதிமன்ற சாட்சியாக

விசாரித்தும் அவரது அறிக்கையினை நீதிமன்ற சான்றாவணமாக குறியீடு செய்தும், மனுதாரர்கள்தரப்பு வழக்கறிஞரின் வாதங்களை கேட்டும், இதர தொடர்புடைய ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் முறையாக விசாரணை நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில் பின்வருமாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

ஆ.ம.எண். 05 / 2007 / நாள் 08.02.2011

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர்களாக விளம்புகை வேண்டி மனுதாரர்களால் இந்துசமயம் மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் 22/1959–ல் சட்டப்பிரிவு 63(பி)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் இந்தக் கோயிலின் பரம்பரைஅறங்காவலர்கள் என்று அறிவித்து ஆணையிடப்படுகிறது.

ஒம்./ ச.லட்சுமணன்
இணை ஆணையர்.

/ உத்திரவின்படி /

[signature]

குறிப்பு: முடிவுகளுக்கான காரணங்கள் அடங்கிய இந்த ஆணையின் இணைப்பின் சான்றிட்ட நகல் உரிய நீதிமன்ற கட்டண வில்லை ஒட்டப்பட்ட விண்ணப்பம் அளிப்பதன் பேரில் வழங்கப்படும்.

பெறுநர்:–

1) மனுதாரர்கள் (வழக்கறிஞர் மூலமாக) திரு.கே.சுப்பிரமணியன், வழக்கறிஞர், தஞ்சாவூர் நகர்
2) எதிர்மனுதாரர்: தக்கார், மேற்படி திருக்கோயில், (இருப்பு: செயல் அலுவலர், அருள்மிகு கண்டேஸ்வரசுவாமி திருக்கோயில், தாமரங்கோட்டை)
3) ஆய்வாளர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, பட்டுக்கோட்டை
4) உதவி ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர்.
5) ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34

(உத்திரவின் இணைப்புடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.)

6 உபரி.

/ உண்மைநகல் /

மேலாளர்.

1/12/11

உத்திரவு இணைப்பின் நகல் 207

தஞ்சாவூர், இந்துசமய அறநிலையத் துறை, இணை ஆணையர் முன்பாக
2011–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8 –ம் நாள்

(திருவள்ளுவராண்டு 2042 தை மாதம் –ம் நாள்)

முன்னிலை : திரு.ச.லட்சுமணன் எம்.எஸ்சி, பி.எல்., எம்.பி.ஏ,
இணை ஆணையர்.

அசல் மனு எண். 05/2007

1) ராமசாமி வேளாளர் ..... மனுதாரர்கள்
2) பழனிவேல் வேளாளர்
3) பெருந்தகை இளங்கோ
4) ராஜேந்திரன் தொன்டைமான்
5) ரெங்கசாமி முதலியார்
6) சோலைவாசன்

/ எதிர் /

தக்கார் / செயல் அலுவலர்,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
வெண்டாக்கோட்டை ..... எதிர்மனுதாரர்

= = =

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் நிர்வாகம் தொடர்பாக

தமிழ்நாடு, இந்துசமயம் மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் 22/1959–ல் சட்டப்பிரிவு 63(பி)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

அசல் மனு எண். 05/2007 நாள். 08.02.2011 உத்திரவின் இணைப்பு

மனுதாரர்கள் வழக்கிடைக் கோயிலின் பரம்பரை அறங்காவலர்களாக அறிவிக்கக் கோரி மனுதாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் சார்பில் வழக்குரைஞர் திரு.கே.சுப்பிரமணியம் ஆஜர் ஆனார். மனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுத்திருக்கோயில், வெண்டாக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த நான்கு கரைதாரர்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி நான்கு கரைகளைச் சேர்ந்த 23 நபர்கள் ஒப்பந்தம் எண்.5208/1911 நாள் 19.08.1911ல் ஒரு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தப் பத்திரம் மேற்கொண்டனர் எனவும், அந்தப் பத்திரத்தில் மனு திருக்கோயில் மற்றும் அதன் சொத்துக்களை மேற்படி 23 கரைதாரர்களுக்குள் 5 தர்மகர்த்தர்கள் கவனித்து வர வேண்டும்

எனவும் அதன்படி பின்வரும் ஐந்து நபர்கள் தலைமைதார்கள் /தர்மகர்த்தர்கள் என நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும்,

1) திரு. கோவிந்தசாமி வேளார் த/பெ.தர்மராஜா வேளார்,
2) திரு.ராசப்ப வேளாளர், த/பெ.தம்பி ராயா வேளார்,
3) திரு.சொக்கலிங்க செட்டியார் த/பெ.சாமி செட்டியார்,
4) திரு.கோவிந்தசாமி நாயக்கர் த/பெ. வடமலை நாயக்கர் மற்றும்
5) திரு.ரெங்கசாமி முதலியார் த/பெ.ராமசாமி முதலியார்

மேற்படி ஐந்து நபர்களும் சரியான கணக்குகள் பேணவும், திருவிழா மற்றும் நித்யபடி பூஜைகள் நல்ல முறையில் நடைபெறுவதை கண்காணித்திட வேண்டும் எனவும் மேலும் 19.08.1911ம் தேதியில் ஏற்பட்ட செட்டில்மெண்ட்படி மேற்படி நான்கு கரைதாரர்களும் தங்கள் உரிமையை விட்டுக் கொடுத்து மேற்படி ஐந்து நபர்களை தர்மகர்த்தர்களாக நியமனம் செய்துள்ளனர் எனவும், அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களது வாரிசுகள் தர்மகர்த்தர்கள் நிலையில் மேற்படி திருக்கோயிலின் நிர்வாகத்தை தொடர்ந்து பார்த்து வரவேண்டும் எனவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது எனவும், அன்றிலிருந்து திருக்கோயிலின் நிர்வாகம் மேற்படி ஐந்து நபர்களும் பார்த்து வந்தனர் எனவும், திருக்கோயிலினை நல்ல முறையில் பராமரித்தும், பூஜை மற்றும் திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர் எனவும், திருக்கோயில் சொத்துக்கள் தொடர்பான வருவாய் ஆவணங்களில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்காக தர்மகர்த்தர்கள் என்று பதிவு உள்ளது எனவும், திருக்கோயிலினை நிர்வாகம் செய்துவந்த தர்மகர்த்தர்கள் காலப்போக்கில் மரணமடைந்த நிலையில் அவர்களின் வாரிசுகள் தற்போது தொடர்ச்சியாக மனு திருக்கோயிலினை நிர்வாகம் செய்து வருகின்றனர் எனவும், தற்போதைய மனுதாரர்கள் 19.08.1911ல் தெரிவிக்கப்பட்டுள்ள 5 தர்மகர்த்தர்களின் வாரிசுகள் எனவும், மனுதாரர்கள் திருக்கோயிலின் நிர்வாகத்தினை ஏற்றவுடன் மனு திருக்கோயிலின் திருப்பணிக்கு ஏற்பாடு செய்துள்ளனர் எனவும், அதன்படி குழு ஏற்படுத்தியுள்ளனர் எனவும், கரைதாரர்கள் மற்றும் பொதுமக்கள் குறை ஏதும் கூறாத வண்ணம் நல்ல முறையில் நிர்வாகம் செய்து வருகின்றனர் எனவும், இந்து சமய அறநிலையத்துறை பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமனம் செய்த நிலையில், நியமனம் செய்யப்பட்ட நபர்கள் திருக்கோயிலில் பொறுப்பு ஏதும் எடுக்காமல் இருந்துள்ளனர் எனவும், தொடர்ந்து மனு தாரர்களே நிர்வாகம் செய்து வருகின்றனர் எனவும், தற்போது இந்து சமய அறநிலையத்துறை பரம்பரை அல்லாத அறங்காவலரை நியமனம் செய்தால் அது மனுதாரர்களின் உரிமையை பாதிக்கும் வகையில் அமையும் என்றும், எனவே இணை ஆணையர் முன் சட்டப்பிரிவு 63(பி)ன் கீழ் பரம்பரை அறங்காவலர் உரிமை விளம்புகை பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மனுவில் மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக 6 இனங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 19.08.1911ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம், இரண்டாவதாக 30.10.1958ல் ஏற்படுத்தப்பட்ட ஆர்,எஸ்.ஆர் பதிவேட்டில் நகல், மூன்றாவதாக புல.எண்.8ல் கோவில் மற்றும் குளம் அமைந்துள்ளதைக் காட்டும் புல வரைபடம், , நான்காவதாக புல.எண்.111ல் கோவில் நிலம் உள்ளதற்கான சிட்டா மற்றும் ஐந்தாவதாக பட்டா 404ல் உள்ள நிலங்களை காட்டும் கணிணி பட்டா , ஆறாவதாக திருப்பணிக்குழு அமைத்த உத்தரவு நகல் மற்றும் ஏழாவதாக திருக்கோயில் திருப்பணியின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஆகியவை சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுவில் முதலாம் மனுதாரரான திரு.ராமசாமி வேளார் என்பவர் முதலாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் முன்சொன்ன 7 ஆவணங்களை தாக்கல் செய்து மனுவில் தெரிவித்த சங்கதிகளை தெரிவித்து மனுப்படி தீர்ப்பளிக்க வேண்டியுள்ளார்.

திரு.பெருந்தகை இளங்கோ, தனது 17.062008ந் தேதிய கடிதத்தில் தன்னை மேற்படி வழக்கில் இருந்து விடுவித்திட கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், திரு.சோலைவாசன் செட்டியார் த/பெ.முருகையன் செட்டியார் தம்மை 6வது மனுதாரராக சேர்க்கக் கோரி தாக்கல் செய்த இடைநிலை மனு எண்.4/208ன்படி ஏற்கப்பட்டது.

இம்மனு குறித்து பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர் அறிக்கை ஒ.மு.எண்.இல்லை/2009 நாள்.05.01.2010ல் அறிக்கை பெறப்பட்டு, அந்த அறிக்கை 20.07.2010ல் நீதிமன்ற சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அவர் தனது அறிக்கையில் இம்மனுவின் மனுதாரர்களான திரு.ஆர்.இராமசாமி, 2)திரு.சி.பழனிவேல், 3) திரு.மு.சோலைவாசன், 4)திரு.ஆர்.இராஜேந்திரன், 5)திரு.சி.ரெங்கசாமி ஆகியோர்களை விசாரித்தார் எனவும் அவர்கள் மனுவில் தெரிவித்த சங்கதிகளை தெரிவித்துள்ளனர் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் ஊர் முக்கியப் பிரமுகரான வெண்டாக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர், திரு.கோ.புருஷோத்தமன் த/பெ.கோவிந்த வேளாளர் என்பவரை விசாரித்ததாகவும் அவர் தனக்கு 53 வயது ஆகியறது எனவும், புல.எண். 8(1) ,111ல் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் உள்ள இடமும், மேற்படி திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களும் மனுதாரர்களால் பராமரித்து வரப்படுகிறது எனவும், மேற்படி சொத்துக்கள் மேற்படி ஐந்து நபர்களின் மூதாதையர்களால் பராமரிக்கப்பட்டு வந்ததாகவும், தற்போது மேற்படி சொத்தை மேற்படி ஐந்து நபர்களும் பராமரித்து வருவதாகவும், மேற்படி சொத்துக்களின் பட்டாவில் மேற்படி நபர்களின் மூதாதையர்கள் நம்பகர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதாக வாக்குமூலம் அளித்துள்ளார் எனவும் ஆய்வர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இரண்டாவதாக மேற்படி ஊரைச் சேர்ந்த 80 வயதான திரு.வீரப்பெருமாள்

த/பெ.கோவிந்த வேளாளர் என்பவரை விசாரித்துள்ளார். அவர் தனது வாக்குமூலத்தில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலும், அதன் சொத்துக்களையும் மனுதாரர்களின் மூதாதையர்கள் மேற்படி கோயிலுக்கு தானமாக வழங்கி பல தலைமுறையாக நான்கு கரைதாரர்களாக இருந்து பராமரித்து வந்ததுள்ளார்கள் என்றும் அன்னார்களுக்கு பரம்பரை உரிமை வழங்கினால் மேற்படி திருக்கோயில் மேன்மேலும் வளர்ச்சி அடையும் என வாககுமூலம் கொடுத்துள்ளார் என ஆய்வர் தெரிவித்துள்ளார். மூன்றாவதாக மேற்படி ஊரைச் சேர்ந்த 69 வயது நிரம்பிய திரு.கணபதி த/பெ.முருகையன் என்பவரை விசாரித்துள்ளார். அவர் தனது வாக்குமூலத்தில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மிகவும் பழுதடைந்து இருந்ததாகவும், மேற்படி கோயிலை மனுதாரர்களின் முயற்சியாலும், உழைப்பாலும், பொருளாதார உதவியாலும் பழுது பார்க்கப்பட்டு கடந்த 2008ல் கும்பாபிஷேகம் நடைபெற்றதாகவும், மேற்படி திருக்கோயில் இடம், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்கள் மேற்படி நான்கு கரைதாரர்களின் மூதாதையர்களால் எழுதி வைக்கப்பட்டது என்றும், மேற்படி சொத்துக்களையும், திருக்கோயிலையும் பல தலைமுறையாக கவனித்து வருவதாக வாய்வழி செய்தியாகவும், தனது மூதாதையர்கள் மூலமும் அறிந்து கொண்டேன் என்றும், மேற்படி நபர்களை பரம்பரை தர்மகர்த்தாவாக செயல்பட அனுமதி வேண்டி உள்ளது ஏற்புடையது என்றும், மேற்படி நபர்களை பரம்பரை தர்மகர்த்தாவாக உரிமம் வழங்கினால் மேற்படி திருக்கோயில் மேன்மேலும் சிறப்படையும் எனவும் வாக்குமூலம் கொடுத்துள்ளளார் என ஆய்வர் தெரிவித்துள்ளார். மேலும் தனது அறிக்கையில் இத்திருக்கோயிலுக்கு பாலத்தளி, அருள்மிகு துர்க்கையம்மன் திருக்கோயிலின் செயல் அலுவலர தக்காராக நியமனம் செய்து நிர்வாகம் பார்த்து வரப்படுகிறது எனவும், விதி 6ன் கீழ் உதவித் தொகை நிர்ணயம் செய்து வரப்படுகிறது எனவும், கடந்த 2008ல் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது எனவும், தற்போது உண்டியல் நிறுவப்பட்டு ரூ.19,000/– வருமானம் பெறப்பட்டுள்ளது எனவும், வெள்ள நிவாரணத் தொகையான ரூ.26,000 பெறப்பட்டு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து மனுதாரர்கள் மற்றும் ஊர்பிரமுகர்களின் வாக்குமூலத்தை இணைத்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

ப்ந்த மனுவில் முக்கியமாக ம.த.சா 1ஆக குறியீடு செய்யப்பட்ட 19.08.1911ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் " 600 பொரு மதிப்புள்ள சொத்துக்களைக் கொண்ட ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கோயில் நஞ்சை இருவார மாணியமும், ஒருவார மானியம், உச்சுங்காலங்களில் வரும்படியும், மேற்படி கோவிலைத் தவிர மேற்படி கிராமத்தில் இருக்கிற மாரியம்மன் கோயில், அய்யனார் கோவில், முனிக்கோவில் இந்த கோவில் வகையறா வரும்படியும் பொருமானம் உட்பட மேல்கண்ட ரூ.600ம் நாம் வகையறா பேர்கள் 4 கரையை சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துமையில்லாமல் பலவித கெடுதிகள் ஏற்பட்டு, இப்போது 4 கரைக்கு தலைமைகாரர்களும் அதை சேர்ந்தவர்களும் 4

கரைக்கு உள்பட நாம் செய்து கொண்ட ஏற்பாடு நம்மளுக்குள்ளாக 1) திரு. கோவிந்தசாமி வேளார் 2) திரு.ராசப்ப வேளாளர் 3) திரு.சொக்கலிங்க செட்டியார் 4) திரு.கோவிந்தசாமி நாயக்கர் மற்றும் 5) திரு.ரெங்கசாமி முதலியார் இவர்கள் தலைமைகாரர்களாக இருந்து மேற்படி கோவில் விஷயங்களையும் அதன் வரும்படிகளையும் பாதுகாத்து மேற்படி கோவிலுக்கு செய்ய வேண்டிய காரியங்களை செய்தும் திருவிழா நடத்தியும் ஒவ்வொரு வருஷத்திலும் வரும் வரும்படிக்கும் சிலவுக்கும் கணக்கு ஏற்படுத்தி ஒவ்வொரு தலைமையான காரைகாரர்களிடம் ஒவ்வொரு வருஷத்துக்கும் ஒவ்வொருவரும் விவரம் கொடுக்க வேண்டியது. மேற்படி கிரயத்தில் ஏற்கனவே நடந்த மாமூல்படிக்கும் இப்போது நடந்து வரும் ஏற்பாட்டு படிக்கும் தீர்த்தம் திருநீர் வகையா பழைமை படி நடத்து கொள்ளுகிறது. இவ்விதம் நாம் 10 வருஷத்துக்கு மேலே கண்ட ஐவருக்கும் நாம் மற்றவர்கள் பாத்தியத்தை கொடுத்துயிருப்பதால் அதற்கு மேல் இதில் கண்டவர்களும் அவர்களின் வாரிசுகளும் மேலே கண்ட அஞ்சு பேர்களைபாவது அல்லது அவர்களின் வாரிசுகளையாவது இருந்து நடத்தும் விஷயத்தை அவரவர்கள் பிரியபடி நடந்து கொள்வது. இவ்வித ஏற்பாட்டின் பேரில் இந்த செட்டில்மெண்ட் பத்திரம் செய்து கொண்டோம் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மனு திருக்கோயிலானது மனுதாரர்களின் முன்னோர்களால் பார்த்து வரப்பட்ட விபரம் தெரிய வருகிறது. ம.த.சா 2 ஆக சமர்ப்பிக்கப்பட்ட 30.10.1958ல் ஏற்பட்ட ஆர்.எஸ்.ஆர் பதிவேடு நகலில் சர்வே எண்.111–1, 111–2ல் 8.31 ஏக்கர் விஸ்தீர்னம் கொண்ட நஞ்சை நிலத்தின் பட்டாதாரராக ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் டிரஸ்டிகள் அ.தர்மராய வேளாரும் இன்னும் நான்கு பேர்களும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.த.சா 4ஆக சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருக்கோயிலுக்கு சொந்தமான பட்டா வில் சர்வே எண்.111ல் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவில் நம்பகர்கள் த.ராசப்பவேளாளர் –1, பெ.தட்ரமராஜன்–2, ராமசாமி செட்டியார்–3, செ.சிதம்பர முதலியார்–4, பொ.அருணாசல தொண்டமான்–5 என குறிப்பிடப்பட்டுள்ளது. ம.த.சா 5–ஆக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கனினி சிட்டாவிலும் மேற்படி விபரங்கள் பதியப்பட்டுள்ளது. ம.த.சா–6ஆக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தஞ்சாவூர், இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையரின் செ.மு.ந.க.எண்.8850/2005 அ7 நாள்.26.06.2007ல் மனுத்திருக்கோயிலுக்கு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு அதில் மனுதாரர்களான ஐந்து நபர்களும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். ம.த.சா–7 ஆக திருக்கோயிலின் திருப்பணி நடைபெற்று வரும் புகைப்படம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனுத்திருக்கோயில் மனுதாரர்களின் மூதாதையர்களான நான்கு கரைதாரர்களால் நிர்வகிக்கப்பட்டு அவர்களுக்குள் கருத்து ஒற்றுமையாக ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட்படி இம்மனுவின் மனுதாரர்களின் தந்தை மற்றும் பாட்டனார்களால் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது என்பது மனுதாரர்கள் சமர்ப்பித்துள்ள செட்டில்மெண்ட் பத்திரம், வருவாய் ஆவணங்களான1958ம் ஆண்டு ரீசர்வே பதிவேடு, பட்டா மற்றும் கணிணி பட்டா ஆகியவற்றின் மூலம் அறியமுடிகிறது. மேலும் இத்திருக்கோயிலின் திருப்பணிக்கு

மனுதாரர்கள் திருப்பணி குழு உறுப்பினர்களாக செயல்பட்டு குடமுழுக்கினை 2008ல் நிறைவு செய்துள்ளனர் என்பது மனுதாரர் தரப்பு சான்றாவணம் 6 மற்றும் சரக ஆய்வரது அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது.

ஆவணங்கள், வாக்குமூலங்கள் மற்றும் ஆய்வரது அறிக்கையில் இருந்து மனுதாரர்கள், அவர்களது முன்னோர்கள் ஆகியோர்கள் மட்டுமே இத்திருக்கோயிலினை நிர்வாகம் செய்து வந்துள்ளனர் என்பது இதன் மூலம் நன்கு உறுதியாகிறது. ஆகவே மனுதாரர்களே வழக்கிடைத் திருக்கோயிலுக்கு பரம்பரை அறங்காவலர்கள் என தீர்மானிப்பதில் தவறில்லை. எனவே தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு பின்வரும் நபர்களை பரம்பரை அறங்காவலர்களாக விளம்புகை செய்து உத்திரவிடப்படுகிறது.

1) திரு.ராமசாமி வேளாளர் த/பெ.ரெங்கசாமி வேளாளர்.
2) திரு.பழனிவேல் வேளாளர் த/பெ.சின்னக்கண்ண வேளாளர்.
3) திரு.சோலைவாசன் த/பெ.முருகையன் செட்டியார்.
4) திரு.ராஜேந்திரன் தொண்டமார் த/பெ.ராமலிங்க தொண்டமார் மற்றும்
5) திரு.ரெங்கசாமி முதலியார் த/பெ.சிதம்பர முதலியார்.

மேலும் சரக ஆய்வரது அறிக்கையில் இத்திருக்கோயிலுக்கு தக்கார் நியமிக்கப்பட்டு 2006ல் பொறுப்பேற்றுள்ளதாகவும், பின்னர் 2008ல் திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளதாகவும், திருக்கோயிலில் உண்டியல் வைக்கப்பட்டு ரூ.19,000 வருமானம் வரப்பெற்றுள்ளதாகவும், ரூ.26,000 நிரந்தர முதலீடு செய்திருப்பதாகவும் தெரிவித்திருப்பதால், இத்திருக்கோயிலின் நடைமுறை நிர்வாகம் செயல் அலுவலர் பொறுப்பில் இருந்தால் மேன்மேலும் வளர்ச்சி அடைய வாய்ப்புள்ளது. எனவே இந்து சமய அறக்கொடைகள் சட்டம் 22/1959ன்படி பொருத்தமான அலுவலரால் செயல் அலுவலர் நியமனம் செய்யப்பட பரிந்துரைக்கப்படும் எனவும், செயல் அலுவலர் நியமனம் பெற்ற பின் செயல் அலுவலர் மற்றும் பரம்பரை அறங்காவலர் குழு இத்திருக்கோயிலினை கூட்டாக நிர்வாகம் செய்திட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

ஒம்./ ச.லட்சுமணன்
இணை ஆணையர்.

/ உத்திரவின்படி /

மேலாளர்.

1/12/11

மனுதரப்பு சாட்சிகள்.

1) திரு.ராமசாமி வேளாளர்

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்

| | |
|---|---|
| Ex.A.1 | 19.08.1911ல் ஏற்படுத்தப்பட்ட செட்டில் மெண்ட் பத்திரம் |
| Ex.A.2 | 30.10.1958ல் ஏற்பட்ட ஆர்.எஸ்.ஆர் பதிவேடு நகல் |
| Ex.A.3 | புல.எண்.8ல் கோவில் மற்றும் குளம் அமைந்துள்ளதைக் காட்டும் வரைபடம் |
| Ex.A.4 | புல எண்.111ல் கோவில் நிலம் உள்ளதற்கான சிட்டா |
| Ex.A.5 | பட்டா நம்பர் 404ல் நிலங்களைக் காட்டும் கம்ப்யூட்டர் பட்டா |
| Ex.A.6 | உதவி ஆணையர் செ.மு.ந.க.8850/2005 அ7 நாள்.26.06.2007. |
| Ex.A.7 | திருக்கோயிலின் புகைப்படம் |

நீதிமன்ற சாட்சி

திருமதி.ஆர்.ஒளிநிலா, ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை, பட்டுக்கோட்டை

நீதிமன்ற சான்றாவணம்

Ex.C.1 13.01.2010–ல் அளிக்கப்பட்ட இந்துசமய அறநிலையத்துறை, பட்டுக்கோட்டை, சரக ஆய்வாளர், அறிக்கை ஒ.மு.எண்.இல்லை/2009 நாள்.05.01.2010

ஒம்./ ச.லட்சுமணன்
இணை ஆணையர்.

/ உண்மைநகல் /

மேலாளர்.

17/2/11